**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

**8th செப்டம்பர் / September 2024 ஞா யிறு ஆராதனை**

Youth Sunday

† ***ஆராதனைக்கு அழைப்பு*** — ***மிஸ். லீனா தனபாலன்***
Call to Worship — Miss. Leena Dhanapalan

***இறைவணக்கப்பாடல்*** — ***பாடகர் குழு***
Introit — Choir

***ஜெபம்*** — ***மிஸ். லீனா தனபாலன்***
Prayer — Miss. Leena Dhanapalan

† ***தொடக்க பாடல்*** — ***சபையார் இணைந்து***
Opening Song — Congregation

***நல் மீட்பர் பட்சம் நில்லும்!***

*1. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*ரட்சணிய வீரரே!*
*ராஜாவின் கொடியேற்றி*
*போராட்டம் செய்யுமே!*
*சேனாதிபதி இயேசு*
*மாற்றாரை மேற்கொள்வார்*
*பின் வெற்றி கிரீடம் சூடி*
*செங்கோலும் ஓச்சுவார்.*

*2. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*எக்காளம் ஊதுங்கால்,*
*போர்க்கோலத்தோடு சென்று*
*மெய் விசுவாசத்தால்*
*அஞ்சாமல் ஆண்மையோடே*
*போராடி வாருமேன்;*
*பிசாசின் திரள்சேனை*
*நீர் வீழ்த்தி வெல்லுமேன்.*

*3. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*எவ்வீர சூரமும்*
*நம்பாமல், திவ்விய சக்தி*
*பெற்றே பிரயோகியும்;*
*சர்வாயுதத்தை ஈயும்*
*கர்த்தாவை சாருவீர்*
*எம்மோசமும் பாராமல்*
*முன் தண்டில் செல்லுவீர்.*

*4. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*போராட்டம் ஓயுமே;*
*வெம்போரின் கோஷ்டம்,*
*வெற்றி*
*பாட்டாக மாறுமே1*
*மேற்கொள்ளும் வீரர் ஜீவ*
*பொற் கிரீடம் சூடுவார்;*
*விண் லோக நாதரோடே*
*வீற்றரசாளுவார்.*

† ***மாறி வாசித்தல் 36ம் ஞாயிறு*** — ***சபையார் இணைந்து***
***“சங்கீதம் 107”*** — Congregation

“கர்த்தரைத் துதியுங்கள்”

Psalter Reading “Psalm 107”

† ***தந்தை போற்றி*** — ***சபையார் இணைந்து***
Gloria Patri — Congregation

***துதி ஆராதனை***
Singspiration

***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

***பரமண்டல ஜெபம்*** — ***சபையார் இணைந்து***
Lord’s Prayer — Congregation

† ***காணிக்கை பாடல்*** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

***எங்கும் புகழ் யேசு ராசனுக்கே***

**எங்கும் புகழ் யேசு ராசனுக்கே**
**எழில் மாட்சிமை வளர் வாலிபரே!**

**உங்களையல்லவோ உண்மை வேதங்காக்கும்**
**உயர்வீரரெனப் பக்தர் ஓதுகிறார்**

*1. ஆயிரத் தொருவர் ஆவீரல்லோ நீரும்*
*அதை அறிந்து துதி செய்குவீர்,*
*தாயினும் மடங்கு சதம் அன்புடைய*
*சாமி யேசுவுக்கிதயம் தந்திடுவீர்.*

*2. கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதோர்க்குக்*
*கடன்பட்டவர் கண்திறக்கவே;*
*பல்வழி அலையும் பாதைதப்பினோரைப்*
*பரிந்து திருப்ப நிதம் பார்த்திடுவீர்.*

*3. தாழ்மை சற்குணமும் தயை காருண்யமும்*
*தழைப்பதல்லோ தகுந்த கல்வி?*
*பாழுந்துர்க்குணமும் பாவச் செய்கையாவும்*
*பறந்தோடப் பார்ப்பதுங்கள் பாரமன்றோ?*

*4. சுத்த சுவிசேஷம் துரிதமாய்ச் செல்ல*
*தூதர் நீங்களே தூயன்வீரரே;*
*கர்த்தரின் பாதத்தில் காலைமாலை தங்கிக்*
*கருணை நிறை வசனம் கற்றிடுவீர்.*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

*சிறப்புப் பாடல்* — ***வாலிபர்கள்***
Special Song — Youth

✝ ***திருமறைப் பாடம்***
***I தீமோத்தேயு 4 : 6 - 12***
Scripture Reading — Miss. Ebina / Mr. Joshua
1 Timothy 4 : 6 - 12

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

***<u>இயேசு எந்தன் வாழ்வின் பெலனானார்</u>***

**இயேசு எந்தன் வாழ்வின் பெலனானார்**
**எனக்கென்ன ஆனந்தம்**

*1. எந்தன் வாலிப காலமெல்லாம்*
*எந்தன் வாழ்க்கையின் துணையானார்*
*உம் நாமமே தழைத்தோங்க*
*நான் பாடுவேன் உமக்காக*

**எந்தன் இதயமே உம்மைப் பாடும்**
**எந்தன் நினைவுகள் உமதாகும்**

*2. பெருந்தீமைகள் அகன்றோட*
*பொல்லா மாயைகள் மறைந்தோட*
*உமதாவியின் அருள் காண*
*வருங்காலங்கள் உமதாகும்.*

*3. உந்தன் ஊழியம் செய்திடவே*
*என்னை உமக்கென தெரிந்து கொண்டீர்*
*உந்தன் சித்தம் என்னில் விளங்க*
*என்னைப் படைக்கிறேன் உமக்காக.*

***அறிவிப்புகள்***
Announcements

Youth Presentation

***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
✝ Weekly Memory Verses — Congregation
***I தீமோத்தேயு 4 : 8***
1 Timothy 4 : 8

***8. சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**